வேலூர், மாவட்டக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண்: 4336 / ஆ2 / 2018 நாள்: .09.2022

பொருள் : பள்ளிக் கல்வி – வழக்கொழிந்த (Obsolete) பாடநூல்கள் தமிழ்நாடு பாடநூல் கல்வியியல் பணிகள் கழகம் – 2012 – 2013 ஆம் கல்வியாண்டிற்கு பின்னர் அச்சடிக்கப்பட்ட பழைய வழக்கொழிந்த பாநூல்களை (Obsolete) மாவட்ட விநியோக மையத்திற்கு அனுப்பக் கோருதல் - சார்பு

பார்வை : வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்: 993 / அ5 / 2021 நாள்:02.09.2022.

*******

பார்வையில் காணும் செயல்முறைகளின் படி வேலூர் கல்வி மாவட்டத்தில் உள்ள அரசு / நகரவை / ஆ.தி.ந / அரசு நிதியுதவி பெறும் உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் 2012 – ஆம் ஆண்டு முதல் -2021 ஆம் ஆண்டு வரை அச்சடிக்கப்பட்ட பழைய வழக்கொழிந்த பாடநூல்கள் (Obsolete) பள்ளிகளில் இருப்பு இருப்பின் பழைய வழக்கொழிந்த பாடநூல்களை மட்டும் தனியே அப்புறப்படுத்தி ஆண்டு வாரியாக ( 2012 முதல் – 2021 வரை) வகுப்பு வாரியாக மற்றும் பாட வாரியாக என தனித்தனியே கட்டி Abstract தயார் செய்து பழைய பாடநூல்களை காட்பாடி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் உள்ள மாவட்ட புத்தக கிடங்கில் 09.09.2022 க்குள் ஒப்படைக்குமாறு அனைத்து வகை பள்ளி தலைமை ஆசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், சார்ந்த பள்ளிகளில் பழைய வழக்கொழிந்த பாடநூல்கள் இருப்பு இல்லை எனில் 2012 ஆம் ஆண்டு முதல் 2021ஆம் ஆண்டு வரை அச்சடிக்கப்பட்ட பழைய வழக்கொழிந்த பாடநூல்கள் இல்லை எனில் இன்மை அறிக்கை இவ்வலுவலக ஆ2 பிரிவில் நேரில் ஒப்படைக்க வேண்டும்.

இந்நடவடிக்கைகளுக்கு பின்னர் பள்ளிகளில் ஆய்வு மேற்கொள்ளும் போது வழக்கொழிந்த பாடநூல்கள் (Obsolete) ஏதேனும் பள்ளிகளில் இருப்பு உள்ளதாகதெரியவந்தால் அதற்கு சார்ந்த பள்ளி தலைமை ஆசிரியரே முழு பொறுப்பு ஏற்க நேரிடும் என அனைத்து வகை தலைமை ஆசிரியர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

மாவட்டக் கல்வி அலுவலர்,

வேலூர்.

பெறுநர் :
அனைத்து வகை அரசு / நகரவை / ஆ.தி.ந /
அரசு நிதியுதவி உயர் / மேல்நிலைப் பள்ளி தலைமைஆசிரியர்கள்.
வேலூர் மாவட்டம்.

நகல்:
வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.